ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: திரு.ராஜ கோபால் சுன்கரா, இ.ஆ.ப.

ந.க.எண்.5981 /2023–2/ப2 நாள். 20.07.2023

பொருள் – பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – ஈரோடு மண்டலம் – ஈரோடு மாவட்டம் – அரசாணை (நிலை) எண்.125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை, நாள்.27.05.1999ன்படி அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை, நாள்.31.05.2019 இன்படியும் நியமனம் செய்யப்பட்டது – கீழ்நிலைப் பணியில் நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து கருத்தியலாக தமிழ்நாடு அமைச்சுப்பணித் தொகுதியில் ஈர்த்துக்கொள்ள அனுமதித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது – வரித்தண்டலர்கள் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பித்தல் – தொடர்பாக.

பார்வை –
1. அரசாணை (நிலை) எண். 125, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை, நாள்.27.05.1999.
2. அரசாணை (நிலை) எண். 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை, நாள்.31.05.2019.
3. சென்னை பேரூராட்சிகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.984/2013/அ3, நாள்.28.11.2019.
4. ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண்.33892/2019/ப2, நாள்.29.11.2019.
5. சென்னை பேரூராட்சிகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.984/2013/அ3, நாள்.23.08.2021.
6. அரசு கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை, அவர்களின் கடிதம் எண்.360/பேரூ.1/2023–4, நாள்.08.03.2023. இவ்வலுவலகத்திற்கு கிடைக்கப் பெற்ற நாள்.23.03.2023.
7. சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் ந.க.எண்.14709/2021/அ2 நாள்.05.05.2023.
8. கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதம் ந.க.எண்.122/2023, நாள்.05.04.2023.
9. அரியப்பம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதம் ந.க.எண்.134/2023/அ1, நாள்.05.04.2023.

-------

ஆணை:

பார்வை 1இல் காணும் அரசாணை (நிலை) எண்.125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப3) துறை நாள்.27.05.1999ன்படி, பேரூராட்சிகளில் இருந்த நுழைவுப் பணியிடங்களில் (Enter Level Post) பணியமர்த்தப்பட்ட பணியாளர்களை கல்வித் தகுதியின் அடிப்படையில் சிறப்பின நிகழ்வாக ஒரு முறை மட்டும் (One Time Consideration) பணியாளர்களை கீழ்நிலை பணியில் நியமனம் செய்யப்பட்ட நாளின் அடிப்படையில் கருத்தியலாக இளநிலை உதவியாளர் / வரித்தண்டலராக நியமனம் செய்திட அரசாணை (நிலை) எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை, நாள்.31.05.2019ன்படி ஆணையிடப்பட்டது. இவ்வரசாணையில் குறிப்பிடப்பட்ட பணியாளர்களை கீழ்நிலைப் பணியில் நியமனம் செய்யப்பட்ட நாளான 02.06.2001 முதல் கருத்தியலாக (Notionally) நியமனம் செய்து ஈர்த்து கொள்ளலாம் என அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்படி உத்தரவுகள் மற்றும் அரசாணையின்படி, மாவட்ட பேரூராட்சி அலகில் பின்வரும் அட்டவணையில் வ.எண் 1 மற்றும் 2இல் கண்டுள்ள பணியாளர்கள் அவர்களது பெயருக்கெதிரே கலம் 2இல் குறிப்பிட்டுள்ள நுழைவுப் பணியிடங்களில் பணியேற்று அதன்பின்னர் ஊதிய ஏற்றமுறைக்கு கொண்டுவரப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து ஈரோடு மாவட்ட பேரூராட்சி அலகில் அரசு நிலையாக்கப்படாத நுழைவுப் பணியிடங்களில் பணியாற்றி வரும் பணியாளர்களை அவர்களது கல்வித்தகுதியின் அடிப்படையில் அரசு நிலையாக்கப்பட்ட பணியிடங்களிலுள்ள நுழைவு பணியிடங்களான இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் ஆகிய பணியிடங்களில் சிறப்பினமாக கருதி இப்பணியாளர்களை 02.06.2001 முதல் கருத்தியலாக (Notionally) நியமனம் செய்து தனியர்கள் வரித்தண்டலர் /இளநிலை உதவியாளர் போன்ற பணியிடத்தில் முறையாக நியமனம் செய்யப்பட்டு பணியேற்கும் நாளிலிருந்து பணப்பலன்கள் வழங்க அனுமதித்து பார்வை 2இல் காணும் அரசாணையில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசாணைக்கிணங்க, பார்வை 3இல் காணும் பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகளில் இப்பணியாளர்களுக்கு பின்வரும் அட்டவணையில் கலம் 4இல் கண்டுள்ளவாறு வரித்தண்டலர்களாக பணியிடங்கள் வழங்கி ஆணையிடப்பட்டதன்பேரில், தனியர்கள் தமிழ்நாடு அமைச்சுப்பணி தொகுதிக்குட்பட்ட இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியிடங்களில் பார்வை 4இல் காணும் செயல்முறைகளில் அனுமதித்தவாறு பணியில் இணைத்து பணிபுரிந்து வருகிறார்கள்.

இந்நிலையில் பேரூராட்சிகளில் அரசாணை (நிலை) 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.05.2019ன்படி பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு பணியினை 02.06.2001இல் உரிய நியமனஅலுவலரால் (Appointing Authority) வரன்முறைப்படுத்திடவும், மேற்படி அரசாணைக்கு எதிராக தொடரப்பட்ட W.P.No.17989/2019, W.P.No.23426/2019, W.P.No.21574/2019 மற்றும் W.P.No.27597/2019 ஆகிய வழக்குகளில் வழங்கப்படும் தீர்ப்புகளுக்கு உட்பட்டது என்ற நிபந்தனையுடன் வரன்முறைபடுத்தப்பட வேண்டுமென பார்வை 6இல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அரசு கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் ஆகியோர் நிலையில் பணிவரன்முறை செய்திட சம்மந்தப்பட்ட பணியாளரது பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்யப்பட்டதன் அடிப்படையில் சம்பளமில்லா விடுப்பு / தண்டனைக் காலம் ஏதுமில்லததால் தனியருக்கு கருத்தியலாக (Notionally) 13.06.2001ஆம் தேதி முதல் பணிவரன் முறை செய்து ஆணையிடப்பட வேண்டி பார்வை 8இல் காணும் கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சி செயல்அலுவலர் மற்றும் 18.06.2001ஆம் தேதி முதல் பணிவரன்முறை செய்து ஆணையிட வேண்டி, பார்வை 9இல் காணும் அரியப்பம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் கருத்துரு சமர்ப்பித்துள்ளார்கள்.

| வ. எண் | பணியாளர் பெயர் மற்றும் தற்போது வகித்து வரும் பதவி (திருவாளர்கள்) | கீழ்நிலைப் பதவி மற்றும் பணியேற்ற நாள் | அரசாணை எண்.76 ந.நி.மற்றும் கு.வ.(பேரூ.1) நாள்.31.05.2019 | கருத்தியலாக (Notionally) பணியில் ஈர்த்துக் கொள்ளப்பட்ட நாள் | வரித்தண்டலர் பணியிடத்தில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | திரு.மு.ஹக்கீம் சேட் வரித்தண்டலர் கருமாண்டிசெல்லி பாளையம் பேரூராட்சி | 13.06.2001 துப்புரவு மேற்பார்வையாளர் சென்னிமலை | 29.11.2019 மு.ப. வரித்தண்டலர் கருமாண்டிசெல்லி பாளையம் | 13.06.2001 மு.ப. | 13.06.2001 |
| 2 | திரு.சி.மாரிமுத்து வரித்தண்டலர் அரியப்பம்பாளையம் பேரூராட்சி | 18.06.2001 இரவுக்காவலர், அரியப்பம் பாளையம் | 29.11.2019 மு.ப. வரித்தண்டலர் அரியப்பம் பாளையம் | 18.06.2001 மு.ப. | 18.06.2001 |

மேற்படி தனியரது பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்யப்பட்டதன் அடிப்படையில் சம்பளமில்லா விடுப்பு / தண்டனைக்காலம் ஏதுமில்லாததால் மேற்காணும் பணியாளர்களுக்கு கலம் 6இல் காணும் தேதி முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட பணியாளரது பணியினை வரன்முறை செய்த விவரத்தினை பணிப்பதிவேட்டில் பதிவு செய்து அதன் விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு சம்மந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**நிபந்தனைகள்**

1. இவ்வாணையானது அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.05.2019 மற்றும் பேரூராட்சிகளின் இயக்கக ந.க.எண்.984/2013/அ3, நாள்.23.08.2021 செயல்முறை ஆணை ஆகியவற்றிற்கு எதிராக தொடரப்பட்டுள்ள W.P.No.17989/2019, W.P.No.23426/2019, W.P.No.21574/2019 மற்றும் W.P.No.27597/2019 ஆகிய வழக்குகளில் வழங்கப்படும் தீர்ப்புரைகளின் முடிவிற்கு உட்பட்டது.

2. மேற்குறித்த வழக்குகளில் பிறப்பிக்கப்படும் நீதிப்பேராணைகளின்பொருட்டு இவ்வாணையினை நியமன அலுவலரால் திருத்தம் அல்லது இரத்து செய்யப்படும் எனும் உரிமை தக்கவைத்து கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
ஈரோடு மாவட்டம்.

3/6

பெறுநர்

1. திரு.மு.ஹக்கீம் சேட்
   வரித்தண்டலர்
   கருமாண்டிசெல்லி பாளையம் பேரூராட்சி,
   ஈரோடு மாவட்டம். (செயல் அலுவலர் மூலமாக)
2. திரு.சி.மாரிமுத்து,
   வரித்தண்டலர்
   அரியப்பம்பாளையம் பேரூராட்சி,
   ஈரோடு மாவட்டம்.(செயல் அலுவலர் மூலமாக)

நகல்– 1. பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–28
2. சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்கள் (தனியர்களுக்கு சார்வு செய்து சார்வு நகல் அனுப்பவும், பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளும்பொருட்டு)
3. ப2 இருப்பு கோப்பிற்கு.

செ.மு.ந.க.எண்.5981/2023-2/ப2 நாள்.20.07.2023

1. திரு அனுப்பி,

செயல் அலுவலர்,
அரியப்பம்பாளையம் பேரூராட்சி.

பெறுநர்.
திரு. சி. மாரிமுத்து.
வரித்தண்டலர்,
அரியப்பம்பாளையம் பேரூராட்சி.